*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டியதைப் போல் விவசாயிகள் ஏதோ கூட்டம் போட்டு அதன் மூலமாக மின்சாரக் கட்டண உயர்வை எதிர்த்து தங்களுடைய நிலையை விளக்கி மாவட்ட ஆட்சித் தலைவருக்கோ அல்லது அதிகாரிகளுக்கோ மனுக் கொடுப்பது என்ற அளவில் எந்த முடிவையும் எடுக்கவில்லை. அவர்கள் மூன்று கட்டங்களை முன்கூட்டியே அறிவித்திருக்கிறார்கள். முதல் கட்டந் தான் அவர்கள் கூட்டம் போட்டதும் அடையாளமாக ஒருநாள் உண்ணாவிரதம் இருந்ததும், இரண்டாவது கட்டம் மாநில அரசின் அலுவலகங்கள், கலெக்டர் ஆபீஸ் போன்றவற்றின்முன் மறியல் நடத்துவது என்று துண்டு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். மூன்றாவது கட்டமாக மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாமல் வரிகொடா இயக்கம் நடத்துவது என்று தீர்மானித்து பத்திரிகைகளில் வந்திருக்கிறது. இந்த மூன்று கட்டங்களும் எந்த நிலைக்குக் கொண்டு போய்விடும் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உணரு வார்கள் ஆனாலும் இதிலே என்ன வன்முறை வந்துவிடும் என்று கேட்டார்கள்.

இதிலே கைது செய்யப்பட்டிருப்பவர்கள் யார் யார் என்று பார்த்தால் குறிப்பிட்ட சில எம்.எல்.ஏ-க்களைத் தவிர, சில முற்போக்குக் கட்சிக் காரர்களைத் தவிர பெரும்பாலான மற்றவர்கள் இந்த மின் கட்டணத்தால் பாதிக்கப்பட்டவர்களா என்று பார்க்கும்போது மன்றாடியார், சமத்தூர் ஜமீன்தார், வேட்டைக்காரன் புதூர் ஜமீன்தார், பாளை ஜமீன்தார் ஆகிய இவர்கள்தான் பாவம், இந்த ஏழைகள் இந்த மின் கட்டண உயர்வால் அதிக மாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்காக உள்ளபடியே நான் வருந்து கிறேன். (ஆரவாரம்). கம்யூனிஸ்ட் கட்சி அங்கே இணையவில்லை. பி.எஸ்.பி-யும் மற்ற சில முற்போக்குக் கட்சிகளும் அங்கே இணைந்திருக்கின்றன என்றாலும் இதிலே மற்றவர்களும் கலந்து கொண்டிருப்பதற்கு முக்கிய காரணம் உச்ச வரம்புச் சட்டம். இதை முதல் ஆரம்பமாக வைத்துக் கொண்டு உச்ச வரம்புச் சட்டத்தை எதிர்ப்பதற்கான முயற்சியைத் தூண்டி விவசாயி களுடைய படையைத் தயாரிப்பது என்று திட்டம் தீட்டியிருக்கிறார்கள். அந்தக் காரணத்தாலேதான் மன்றாடியார் அவர்களுடைய இல்லத்திலே மிராசுதாரர்கள் கூட்டம் நடைபெற்று அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட காங்கிரஸ் கட்சியின் தலைவரிடத்தில் இதை எடுத்துச் சொல்ல அந்தக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் இன்னும்கூட உச்ச வரம்பின் அளவைக் குறைக்க வேண்டுமென்று கூறியதைக் கேட்டு அங்கிருந்தவர்கள் ஆத்திரப் பட, இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் அங்கே உருவாகியிருக்கின்றன என்ற செய்தி கோவை மாவட்டம் முழுவதும் அனைவருக்கும் தெரியும். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அவருடைய புன்னகைக்குப் பொருள் எனக்கு நன்றாகப் புரிகிறது. இதை அடிப்படை யாக வைத்துக் கொண்டுதான் சிலபேர் இந்தக் காரியத்தில் ஈடுபட்டார்கள். கோவை மாவட்ட விவசாயிகள் சங்கம் என்ற பெயரிலேதான் அவர்கள் இந்த நோட்டீஸைப் போட்டிருக்கிறார்கள். மாவட்ட தாலுகா அலுவலகங் களுக்கு முன்னால் மறியல் போராட்டம் நடத்தவது என்பதாக நோட்டீஸ் போடப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. லாரிகளிலும், கார்களிலும் கொண்டு போய் விவசாயப் பெருங்குடி மக்களை நூற்றுக்கணக்கில் எந்த எந்த இடங்களை குறிப் பிட்டார்களோ அந்த இடங்களில் குவிக்கவும் தொடங்கினார்கள். இதில்

1970 மார்ச் 20] [திரு. மு. கருணாநிதி]

வன்முறை ஏற்படும் என்று அரசு கருதியதா என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்கிறார்கள். இதில் வன்முறை ஏற்படக்கூடும் என்பதற்கு ஒரு சிறிய உதாரணம் தர விரும்புகிறேன். பல்லடத்திலிருந்து 30 பேர்களை கைது செய்து கோவை மத்திய சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லும்போது அப்படி வந்த போலீசாரை, 300 பேர்கள் வளைத்துக் கொண்டு எங்களையும் வேண்டுமானால் அழைத்துக் கொண்டு போங்கள், இல்லாவிட்டால் அவர்களை விட்டு விட்டுப் போங்கள் என்று அவர்களைக் கைது செய்த சில மணி நேரத்திற்குள் இப்படிப்பட்ட அசம்பாவிதமான ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், காவல் துறையினரும் மிகச் சாதுர்யமாகச் சமாளித்து, மிகவும் அமைதியான முறையில் நடந்து கொண்டு இன்னும் ஒரு பத்துப் பேர்களை கைது செய்து அழைத்துச் செல்லும் அளவிற்கு அதற்குக்கூட இடம் அளித்து அந்த அளவிற்கு வளைந்து கொடுத்து அந்த நிலையைச் சமாளித்திருக்கிறார்கள். ஆகவே வன்முறை எந்த நேரத்திலும் தோன்றக்கூடும் என்பதற்கான அடையாளங்கள், அறிகுறிகள் ஏற்பட்டதன் காரணத்தினால்தான் 144 தடை உத்தரவு அங்கு போடப்பட்டது. 144 தடை உத்தரவின் மூலம் விவசாயிகளை எல்லாம் அடக்கி ஒடுக்கி மிரட்ட வேண்டும் அல்லது அவர்களை எல்லாம் தண்டிக்க வேண்டுமென்ற நிலையில் இந்த அரசோ அல்லது அங்கிருக்கிற காவல் துறையினரோ அல்லது மாவட்ட அதிகாரிகளோ எண்ணியிருப்பார்களேயானால் கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்டிருக்க மாட்டார்கள் என்பதை இந்த மன்றத்தில் உள்ள அனைவரும் அறிவார்கள்.

கைது செய்யப்பட்டவர்கள் 10,000, 13,000, 5,000 என்றெல்லாம் அறிக்கைகள் வந்தன. கோவையில் 39 பேர்கள் கைதானார்கள். அவினாசியில் 20 பேர்கள் கைதானார்கள். திருப்பூரில் 32 பேர்கள் கைதானார்கள். பெருந்துறையில் 25 பேர்கள் கைதானார்கள். தாராபுரத்தில் 31 பேர்கள் கைதானார்கள். பொள்ளாச்சியில் 41 பேர்கள் கைதானார்கள். காங்கேயத்தில் 71 பேர்கள் கைதானார்கள். மொத்தத்தில் 265 பேர்கள் கைது செய்யப்பட்டு கோவை மத்தியச் சிறையில் வைக்கப்பட்டார்கள். 19—3—1970 மாலை ஆறரை மணிக்கு அந்த 265 பேர்களும் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

முக்கியமாக வைத்து எழுப்பப்பட்டிருக்கிற பிரச்னை, விவசாயிகள் சங்கத்தின் பிரச்னை, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் கூறியதுபோல் மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்ததாகும். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு விளக்கத்தை இந்த மன்றத்திற்கு அளிப்பது என் கடமை என்று நான் கருதுகிறேன். மின்சாரக் கட்டணம் 8¼ பைசாவிலிருந்து 10 பைசாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால் நமக்கு ஒரு யூனிட்டுக்கு ஆகும் உற்பத்திச் செலவு 16 பைசாவாகும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இந்த 16 பைசா உற்பத்திச் செலவில் இதுவரையில் 8¼ பைசா என்ற அளவில் யூனிட் சார்ஜ் வசூலித்தபோது நமக்குக் கிட்டத்தட்ட ஒன்பது கோடி ரூபாய் அளவிற்கு இழப்பு இருந்தது. அதை ஸப்ஸிடியாக மானியமாகக் கொடுத்து வந்திருக்கிறோம். இப்போது பத்து பைசா என்றாக்கிவிட்டாலும் ஆறு பைசா அளவிற்கு இப்போதும் இந்த அரசு மானியமாக ஆறு கோடி ரூபாய் தருகிறது என்றால்

அது விவசாயிகளின் நன்மைக்காகத்தான் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அண்டை மாநிலமான ஆந்திர மாநிலத்தில் 12 பைசா என்றிருக்கிறது. அஸாமில் 14 பைசா என்றிருக்கிறது. பீஹாரில் 15 பைசா என்றிருக்கிறது. குஜராத்தில் 14 பைசா என்றிருக்கிறது. ஹரியானாவில் 16.22 பைசா என்றிருக்கிறது. மத்திய பிரதேசத்தில் 11.5 பைசா என்றிருக்கிறது. மராட்டியத்தில் 13.87 பைசா என்றிருக்கிறது. ஒரிஸாவில் 12 பைசா என்றிருக்கிறது. இராஜஸ்தானில் 14.3 பைசா என்றிருக்கிறது. உத்தரப் பிரதேசத்தில் 15 பைசா என்றிருக்கிறது. மேற்கு வங்கத்தில் 12 பைசா என்றிருக்கிறது. மைசூரில் 10 பைசா என்றிருக்கிறது. கேரளத்தில் 8 பைசா என்றிருக்கிறது. கேரளத்தில் எட்டு பைசா என்றிருப்பதற்குக் காரணம், கேரளம், மைசூர் ஆகிய மாநிலங்களில் குறைந்த பரப்பளவிற்கு குறைந்த தூரத்திற்குத்தான் மின்சாரம் எடுத்துச் செல்லப்படுவதால் விலை குறைவாக இருக்கிறது. மேலும் அங்கே நீர் மின் நிலையங்களிலிருந்து மட்டும்தான் உற்பத்தி செய்யப்படுவதாலும், மற்ற மாநிலங்களுக்கு அவர்கள் மின்சாரம் கொடுக்கக்கூடிய நிலைமை இருப்பதினாலும் யூனிட்டின் விலை அங்கு குறைவாக இருக்கிறது. நமக்கும் அவர்கள் மின்சாரம் விற்றுக் கொண்டிருக்கிறார்கள். மைசூரிலிருந்தும் கேரளாவிலிருந்தும் நாம் மின்சாரத்தை விலை கொடுத்து வாங்கி பிறகு அந்த மின்சாரம் செல்வதற்கான பரந்த அளவிற்கான போக்குவரத்துச் செலவை எல்லாம் மேற்கொண்டு அதற்காகிற செலவு, விவசாயிகளைப் போய் எட்டிப்பிடிப்பதற்கான செலவு ஆகிய எல்லாம் சேர்ந்து 16 பைசா என்றளவிற்கு வருகிறது. ஆக 8¼ பைசா என்றிருந்ததை பத்து பைசா என்று ஆக்கியிருக்கிறோம். இதில்கூட இப்போதும் நாம் ஆறு பைசா அளவில் சப்ஸிடி கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதில் நமக்கு ஆறு கோடி ரூபாய் என்ற அளவில் இழப்பு ஏற்படுகிறது.

திரு. பூவராகன் அவர்கள் சொன்னார்கள், இங்குமட்டுமல்ல மற்ற மாவட்டங்களிலும் இதற்கான கிளர்ச்சிகள் தொடங்கப்பட இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அவர்களுடைய புதுக் கட்சியை வலுப்படுத்துவதற்கு அந்தக் கிளர்ச்சிகள் பயன்படுமானால் அவர்கள் அதைப் பயன்படுத்திக்கொள்ளட்டும். ஆனால் உண்மை நிலையை உணர வேண்டும். இதைப் பற்றித் தமிழ் நாட்டிலுள்ள தலைசிறந்த பத்திரிகைகள் எல்லாம் இந்த மின்சாரக் கட்டணத்தை உயர்த்தவேண்டும் என்ற அளவில்கூட தலையங்கங்கள் எழுதியிருக்கின்றன. ஆகவே இதில் விவசாயிகள் யாரும் அதிகமாகப் பாதிக்கப்படவில்லை. சர்க்கார் இன்னும் ஆறு கோடி ரூபாய் இழப்பில்தான் விவசாயிகளுக்கான நல்ல காரியங்களைச் செய்து கொண்டு வருகிறது. கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள். இது ஒன்றே விவசாயிகளிடத்திலும் கைது செய்யப்பட்டவர்களிடத்திலும் இந்த அரசுக்குள்ள அனுதாபத்தைக் காட்டும். இந்த விஷயத்தில் மட்டுமல்ல, தொடர்ந்து பல்வேறு கிளர்ச்சிகளிலும் அரசு, நமது சபாநாயகர் அவர்கள் ஒரு நேரத்தில் சுட்டிக்காட்டியதைப்போல், திருவள்ளுவர் அவர்கள் கூறியிருப்பதுபோல்

"கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்"

1970 மார்ச் 20] [திரு. மு. கருணாநிதி]

என்ற நிலையை அரசு மேற்கொண்டிருக்கிறது. நேற்றோடு இந்தக் கிளர்ச்சியும் நடைபெறவில்லை. இன்று அதாவது 20-ம் தேதி யாரும் கைது செய்யப்படவில்லை. ஆகவே இதற்காக அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்ற என் கருத்தினைக் கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 144 தடை உத்தரவை மீறி கைது செய்வது பற்றி விவாதிப்பது இந்த 42-வது விதியின்கீழ் வராது என்பதைப் பற்றி பலமுறை இந்த அவையில் தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இரண்டு பெரிய தலைவர்கள் கைதானபோது வழங்கப்பட்ட தீர்ப்பினை நான் இங்கு குறிப்பிடுவது நலம் என்று நினைக்கிறேன்.

1953ல் " I have received a number of adjournment motions to discuss matters of urgent public importance. There is a motion given notice of by the Hon. Member Sri P. Rangasamy Reddiar The motion is :-

'That the business of the House be adjourned to discuss a matter of urgent public importance, namely—

" the arrest of Sri C. N. Annadurai and four others belonging to the Dravidian Progressive Federation on 13th July 1953 without any justifiable cause." என்று கொடுத்திருக்கிறார்கள். அதற்கு பேரவைத் தலைவர் அவர்கள் கொடுத்த தீர்ப்பை படிக்கிறேன்.—

MR. SPEAKER : " This comes under 'day-to-day administration'. The gentleman who has been arrested has a remedy; he can go to the Court. It cannot become the subject matter of an adjournment motion in this House. I rule it out of order." என்று கொடுத்திருக்கிறார்கள். பிறகு 1957-ல் இன்னொரு பெரிய தலைவர் இதே முறையில் கைதான போது கொண்டு வந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு தலைவர் கொடுத்த தீர்ப்பையும் படிக்கிறேன்.

" I have received notice of an adjournment motion from the Hon. Member Sri S. B. Adityan to discuss a matter of urgent public importance, viz., the arrest of Sri E. V. Ramaswami Periyar. Under rule 49, sub-rule (viii) the matter to be discussed must involve more than the ordinary administration of the law. I am, however, satisfied that the arrest of E.V.R. Periyar is in the normal course of the maintenance of law and order and, I, therefore rule the adjournment motion out of order ".

என்று கொடுத்திருக்கிறார்கள். ஆகவே இது அரசின் அன்றாட நிகழ்ச்சிகளுக்கு உட்பட்டது என்ற காரணத்தால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

### (5) கவன ஈர்ப்பு

### அரசுப் போக்குவரத்து வழித்தடங்களை சிக்கன சீரமைப்பு செய்ததால் ஏற்பட்ட வசதிக் குறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 41-வது விதியின்கீழ் திரு. கோமதிசங்கர தீட்சிதர் அவர்களும், டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்களும் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களும் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அவசர உடனடிப் பொது முக்கியம் வாய்ந்த நிகழ்வைக் கொண்டு வருவார்கள்.